## சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2018–2019ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு – 2018–2019ஆம் கல்வி ஆண்டில் 95 அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல் மற்றும் பணியிடங்கள் தோற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (ப.க2(2))துறை

அரசாணை (நிலை) எண். 166

நாள் 07.08.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி வருடம், ஆடி 22

படிக்கப்பட்டவை:–

1. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.14621/ டபிள்யு4/ இ2/2018, நாள் 26.04.2018, 09.07.2018 மற்றும் 30.07.2018.
2. அரசாணை(நிலை) எண்.98, பள்ளிக் கல்வித் (ப.க2(2)) துறை, நாள் 14.05.2018.
3. அரசாணை(நிலை) எண்.111, பள்ளிக் கல்வித் (ப.க2(2)) துறை, நாள் 04.06.2018.
4. அரசாணை(நிலை) எண்.115, பள்ளிக் கல்வித் (ப.க2(2)) துறை, நாள் 07.06.2018.

---

**ஆணை:–**

2018–19ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் "2018–2019ஆம் ஆண்டில் 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும்" என அறிவிக்கப்பட்டுள்ளது.

2. நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே 2 முதல் 4 வரை படிக்கப்பட்ட அரசாணைகளில், 2018–19ஆம் கல்வி ஆண்டில் 5 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. 2018–2019ஆம் கல்வியாண்டில் 100 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து, முதற்கட்டமாக 5 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், எஞ்சியுள்ள 95 அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திட கோரி பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டன. இக்கருத்துருக்களை நன்கு பரிசீலனை செய்து அரசு பின்வருமாறு ஆணைகளை வெளியிடுகிறது:–

(i) 2018–19ஆம் கல்வியாண்டில், 95 அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திட அனுமதி வழங்கப்படுகிறது. தரம் உயர்த்தப்படும் பள்ளிகளின் விவரங்கள் இவ்வாணையின் இணைப்பில் உள்ளன.

(ii) மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் 95 அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் ரூ.36,900–1,16,600 (நிலை–18) என்ற ஊதிய நிலையில் உள்ள உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களை ரூ.56,900–1,80,500 (நிலை–23) என்ற ஊதிய நிலையில் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை (upgraded) உயர்த்திட ஒப்பளிப்பு வழுங்கப்படுகிறது.

(iii) மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் 95 அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ரூ.36,900–1,16,600 (நிலை–18) என்ற ஊதிய நிலையில் முதற்கட்டமாக 6 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை (தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்களுக்கு) பாடவாரியாக ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(iv) இவ்வாறு தோற்றுவிக்கப்படும் பணியிடங்களை தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறை / வழிமுறைகளின்படி நிரப்பிட வேண்டும்.

(v) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களில் பணியமர்த்தப்படுவோர் அப்பணியிடங்களுக்குரிய ஊதியம் மற்றும் ஏனைய படிகளை பெறத் தகுதியுடையவர்களாவர்.

(vi) மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, ஊரகப் பகுதியில் உள்ள பள்ளிகளில் 15 மாணவர்களும், நகரப் பகுதியில் உள்ள பள்ளிகளில் 30 மாணவர்களும் அக்கலைப் பிரிவில் சேரும்பட்சத்தில், அப்பள்ளிகளுக்கு கூடுதலாக, மேலும் 3 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை (வரலாறு, பொருளியல், வணிகவியல்) பாடவாரியாக இரண்டாம் கட்டமாக ஒப்பளிப்பு செய்யக் கோரி பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து மீண்டும் கருத்துரு பெறப்பட்டால் நடைமுறையில் உள்ள நெறிமுறைகளின் அடிப்படையில், அப்பணியிடங்களை ஒப்பளிப்பு செய்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

(vii) அரசாணை(நிலை)எண்.235, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24.05.1997ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

4. பள்ளிகள் தரம் உயர்த்தப்படும் போது, 1:40 என்ற ஆசிரியர்–மாணவர் விகிதம் பின்பற்றப்படுதல், நடைமுறையில் உள்ள விதிமுறைகளை நிறைவு செய்தல் ஆகியவற்றை பள்ளிக் கல்வி இயக்குநர் உறுதி செய்ய வேண்டும். தரம் உயர்த்தப்படும் பள்ளிகளில் கூடுதல் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட சட்டமன்ற / பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி உதவியை பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை இப்பள்ளிகள் பூர்த்தி செய்வது குறித்து கண்காணிக்க சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு விரிவான ஆணைகளை வழங்கிடுமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. தரம் உயர்த்தப்படும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பளம் குறித்த செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

i. <u>அரசுப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>

"2202-பொதுக்கல்வி- 02 இடைநிலைக் கல்வி- 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்- மாநிலச் செலவினங்கள் - AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம்- 01 - சம்பளங்கள்.
(த.தொ.கு 2202-02-109 AA 0108)"

ii. <u>நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு:-</u>

"2202-பொதுக்கல்வி - 02 இடைநிலைக் கல்வி- 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்- மாநிலச் செலவினங்கள் - AB நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை / மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்-01 - சம்பளங்கள்.
(த.தொ.கு. 2202-02-109-AB-0106)"

6. மேலே பத்தி-3ல் குறிப்பிட்டுள்ள செலவினம் ஒரு "புது துணைப் பணி (New Instrument of Service)" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.பொ-I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை 'A' படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித்(வரவு-செலவு பொது-I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2018-19ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொ-I/கல்வி-II) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. புதிய மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தத்தம் பள்ளியின் தலைமை அலுவலராக (Head of Office) கருதப்படுவர். அவர்களால் அளிக்கப்படும் சம்பளம் மற்றும் இதர செலவிற்கான பட்டியல்களை சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள் / கருவூல அலுவலர்கள் / உதவிக் கருவூல அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் கோப்பு எண்.41231/கல்வி-II/2018 மற்றும் அ.சா.எண்.41515/மை.ம.ஆ.பி/2018, நாள் 07.08.2018ல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 942 (தொள்ளாயிரத்து நாற்பத்து இரண்டு).

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.

(த.பி.பா)

அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை-6.
மாநகராட்சி ஆணையர், சென்னை/கோவை/மதுரை/திருநெல்வேலி/சேலம்.
மாநிலக் கணக்காயர், சென்னை-18
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-5/18/35/79.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.

<u>நகல்:</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
நிதித் (கல்வி-II) / (வரவு செலவு பொது I & II) /CMPC) துறை, சென்னை-9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வி (வரவு-செலவு) துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.
பள்ளிக்கல்வி (அநமு/வரவு-செலவு) துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி /அனுப்பப்படுகிறது/

7/8/2018

பிரிவு அலுவலர்

7/8/18

**அரசாணை(நிலை) எண். 166, பள்ளிக் கல்வித் (ப.க2(2) துறை, நாள் 07.08.2018 ன்**

**இணைப்பு**

**2018-2019ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் 95 அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளின் விவரங்கள்**

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | பள்ளியின் பெயர் |
|---|---|---|
| 1. | அரியலூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, காரைக்குறிச்சி |
| 2. | அரியலூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, தளவாய் |
| 3. | பெரம்பலூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, சத்திரமனை |
| 4. | கோயம்புத்தூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, கெம்பநாயக்கன்பாளையம் |
| 5. | கோயம்புத்தூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, காங்கயம்பாளையம். |
| 6. | கோயம்புத்தூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, நரசீபுரம் |
| 7. | கோயம்புத்தூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, விளாங்குறிச்சி |
| 8. | கோயம்புத்தூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, சிங்காநல்லூர் |
| 9. | கடலூர் | அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, நெல்லிக்குப்பம். |
| 10. | கடலூர் | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, மங்கலம்பேட்டை |
| 11. | திண்டுக்கல் | அரசு உயர்நிலைப்பள்ளி, கொக்கரக்கல் வலசு |
| 12. | திண்டுக்கல் | அரசு உயர்நிலைப்பள்ளி, நாகையகோட்டை |
| 13. | கன்னியாகுமரி | அரசு உயர்நிலைப்பள்ளி, ஆனக்குழி |
| 14. | தருமபுரி | அரசு உயர்நிலைப்பள்ளி, சிட்லிங் |
| 15. | தருமபுரி | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, பெரியாம்பட்டி. |
| 16. | தருமபுரி | அரசு உயர்நிலைப்பள்ளி, கம்மாளப்பட்டி |
| 17. | தருமபுரி | அரசு உயர்நிலைப்பள்ளி, வத்தல்மலை பெரியூர் |
| 18. | ஈரோடு | அரசு உயர்நிலைப்பள்ளி, கூடக்கரை |
| 19. | ஈரோடு | அரசு உயர்நிலைப்பள்ளி, ஏளூர் |
| 20. | ஈரோடு | அரசு உயர்நிலைப்பள்ளி, இராமநாதபுரம் புதூர். |
| 21. | ஈரோடு | அரசு உயர்நிலைப்பள்ளி, தேவர்மலை |

| | | |
|---|---|---|
| 22. | காஞ்சிபுரம் | அரசு உயர்நிலைப்பள்ளி, முசரவாக்கம் |
| 23. | கரூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, மணவாடி |
| 24. | கிருஷ்ணகிரி | அரசு உயர்நிலைப்பள்ளி, மல்லப்பாடி |
| 25. | கிருஷ்ணகிரி | அரசு உயர்நிலைப்பள்ளி, இராமாபுரம் |
| 26. | கிருஷ்ணகிரி | அரசு உயர்நிலைப்பள்ளி, முல்லைநகர், ஓசூர். |
| 27. | கிருஷ்ணகிரி | அரசு உயர்நிலைப்பள்ளி, காளிங்காவரம் |
| 28. | நாகப்பட்டினம் | அரசு உயர்நிலைப்பள்ளி, கடினல்வயல் |
| 29. | நாகப்பட்டினம் | தியாகி வள்ளியம்மை அரசு உயர்நிலைப்பள்ளி, தில்லையாடி |
| 30. | நாகப்பட்டினம் | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, வைத்தீஸ்வரன் கோவில் |
| 31. | நாகப்பட்டினம் | அரசு உயர்நிலைப்பள்ளி, கொற்கை |
| 32. | புதுக்கோட்டை | அரசு உயர்நிலைப்பள்ளி, நார்த்தாமலை |
| 33. | புதுக்கோட்டை | அரசு உயர்நிலைப்பள்ளி, லெம்பலக்குடி |
| 34. | புதுக்கோட்டை | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, இலுப்பூர் |
| 35. | இராமநாதபுரம் | அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மண்டபம் முகாம். |
| 36. | மதுரை | அரசு உயர்நிலைப்பள்ளி, டி.குன்னத்தூர். |
| 37. | மதுரை | அரசு உயர்நிலைப்பள்ளி, அவனியாபுரம் |
| 38. | மதுரை | அரசு உயர்நிலைப்பள்ளி, களிமங்கலம் |
| 39. | மதுரை | அரசு உயர்நிலைப்பள்ளி, முடுவார்பட்டி |
| 40. | மதுரை | அரசு உயர்நிலைப்பள்ளி, கம்பூர். |
| 41. | நாமக்கல் | அரசு உயர்நிலைப்பள்ளி, பொம்மம்பட்டி |
| 42. | நீலகிரி | அரசு உயர்நிலைப்பள்ளி, எமரால்டு |
| 43. | சேலம் | அரசு உயர்நிலைப்பள்ளி, கொண்டையம் பள்ளி |
| 44. | சேலம் | அரசு உயர்நிலைப்பள்ளி, மணியனூர் |
| 45. | சேலம் | அரசு உயர்நிலைப்பள்ளி, சிந்தாமணியூர் |
| 46. | சேலம் | அரசு உயர்நிலைப்பள்ளி, குண்டுக்கல் |

| | | |
|---|---|---|
| 47. | சேலம் | அரசு உயர்நிலைப்பள்ளி, பாகல்பட்டி |
| 48. | சேலம் | அரசு உயர்நிலைப்பள்ளி, அர. செட்டிப்பட்டி |
| 49. | சேலம் | அரசு உயர்நிலைப்பள்ளி, நாழிக்கல்பட்டி |
| 50. | தஞ்சாவூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, கரிசவயல் |
| 51. | தஞ்சாவூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, துவரங்குறிச்சி |
| 52. | தஞ்சாவூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, நீரத்தநல்லூர் |
| 53. | தஞ்சாவூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, பூண்டி |
| 54. | திருப்பூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, அருள்புரம் |
| 55. | திருப்பூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, சரவணபுரம் |
| 56. | திருப்பூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, கானூர்புதூர் |
| 57. | திருப்பூர் | நகரவை உயர்நிலைப்பள்ளி, பத்மாவதிபுரம் |
| 58. | திருவாரூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, பாலையக்கோட்டை |
| 59. | திருவாரூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, கோவிந்தக்குடி |
| 60. | திருவாரூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, ஆணைக்குப்பம் |
| 61. | திருவாரூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, கடுவங்குடி |
| 62. | திருச்சிராப்பள்ளி | வைகவுண்டஸ் கோஷன் அரசு மகளிர் (முஸ்லிம்) உயர்நிலைப்பள்ளி, கீழ்அரண்சாலை, திருச்சி-8. |
| 63. | திருச்சிராப்பள்ளி | அரசு உயர்நிலைப்பள்ளி, அழககவுண்டன்பட்டி |
| 64. | திருச்சிராப்பள்ளி | அரசு உயர்நிலைப்பள்ளி, காணக்கிளியநல்லூர் |
| 65. | தூத்துக்குடி | அரசு உயர்நிலைப்பள்ளி, காளாம்பட்டி |
| 66. | தூத்துக்குடி | பெருந்தலைவர் காமராஜ் அரசு உயர்நிலைப்பள்ளி, தேரிக் குடியிருப்பு |
| 67. | தேனி | நகரவை பெண்கள் உயர்நிலைப் பள்ளி, முகைதீன் ஆண்டவர்புரம் |
| 68. | தேனி | அரசு உயர்நிலைப்பள்ளி, இலட்சுமிபுரம் |
| 69. | தேனி | அரசு உயர்நிலைப்பள்ளி, மயிலாடும்பாறை |
| 70. | திருநெல்வேலி | அரசு உயர்நிலைப்பள்ளி, சீவநல்லூர் |
| 71. | திருநெல்வேலி | அரசு உயர்நிலைப்பள்ளி, வினைதீர்த்த நாடார்பட்டி |

| | | |
|---|---|---|
| 72. | திருநெல்வேலி | அரசு உயர்நிலைப்பள்ளி, துலுக்கர்பட்டி |
| 73. | திருவள்ளூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, இராமாபுரம் |
| 74. | திருவள்ளூர் | அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, முகப்பேர் கிழக்கு |
| 75. | திருவள்ளூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, சீத்தஞ்சேரி |
| 76. | திருவள்ளூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, சுந்தரசோழபுரம் |
| 77. | திருவள்ளூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, பூனிமாங்காடு |
| 78. | திருவண்ணாமலை | அரசு உயர்நிலைப்பள்ளி, பல்லி |
| 79. | திருவண்ணாமலை | அரசு உயர்நிலைப்பள்ளி, மஷார் |
| 80. | திருவண்ணாமலை | அரசு உயர்நிலைப்பள்ளி, இரும்பேடு |
| 81. | திருவண்ணாமலை | அரசு உயர்நிலைப்பள்ளி, உக்கல் |
| 82. | விழுப்புரம் | அரசு உயர்நிலைப்பள்ளி, கடுவனூர் |
| 83. | விழுப்புரம் | அரசு உயர்நிலைப்பள்ளி, அரசூர் |
| 84. | விழுப்புரம் | அரசு உயர்நிலைப்பள்ளி, பேரணி |
| 85. | விழுப்புரம் | அரசு உயர்நிலைப்பள்ளி, கோனூர் |
| 86. | விழுப்புரம் | அரசு உயர்நிலைப்பள்ளி, எறையூர் |
| 87. | வேலூர் | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, நரசிங்கபுரம் (மின்னல்) |
| 88. | வேலூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, கார்ணாம்பட்டு |
| 89. | வேலூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, ஜங்கலாபுரம் |
| 90. | வேலூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, தும்பேரி |
| 91. | வேலூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, கொட்டமிட்டா |
| 92. | வேலூர் | அரசு உயர்நிலைப்பள்ளி, அக்ராவரம் |
| 93. | விருதுநகர் | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, கூமாபட்டி |
| 94. | விருதுநகர் | அரசு உயர்நிலைப்பள்ளி, பள்ளபட்டி |
| 95. | விருதுநகர் | அரசு உயர்நிலைப்பள்ளி, ஓ.மேட்டுப்பட்டி |

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல்//

7/8/2018
பிரிவு அலுவலர்